[1979 ஏப்ரல் 25

பாசனக் குளங்களின் கீழ் உள்ள ஆயக்கட்டுகள்

*வினா எண். 819 : திரு. ஒ. சோ. வேலுச்சாமி மாண்புமிகு வேளாண்மைபாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :—

(அ) நீர்ப்பாசன குளங்கள் புதிதாக அமைக்கப்படும் பொழுது அவைகளுக்குரிய ஆயக்கட்டு நிலங்களைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு தவணைக்கடன் முறையில் சீர்திருத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள புதிய குளங்களின் ஆயக்கட்டு நிலங்களை சீர்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பாசன நிலங்களில் சீரிய நீர் மேம்பாடு நுட்ப முறைகளைக் கையாள வேண்டும் என்பதும் அதற்கேற்ப நிலங்களைத் தவணைக் கடன் முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதும் அரசின் கொள்கையாகும். இத் திட்டம் சில ஏரிப்பாசனப் பகுதிகளில் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது.

(ஆ) இல்லை.

பிளவக்கல் அணைக் கால்வாய்கள்

*வினா எண். 820— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணையில் இருந்து தாமரைக்குளம், பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகிய கண்மாய்களுக்கு (Tank) கால்வாய் போக்குவரத்து அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தாமரைக்குளம் மட்டுமே பிளவுக்கல் அணைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) பிளவுக்கல் அணையிலிருந்து தாமரைக் குளத்திற்கு நீர் வழங்கும் கால்வாய் ஒன்று ரூபாய் 17,500 செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இத் திட்ட மதிப்பீடு தற்பொழுது ஆய்வில் உள்ளது. தாமரைக்குளம் தவிர மற்ற மூன்று குளங்களும் இந் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.